REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2020 நவம்பர் 28 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 88 இல. 283 | November 28,Saturday, 2020 | 20பக்கங்கள் | 30/-

## ஸ்ரீசாஸ்தா பீடத்தில் சங்காபிஷேக விழா



சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடத்தில் பிரதி சனிக்கிழமைகள் தோறும் மாலை 5 மணி முதல் விஷேட திரவ்ய அபிஷேகம், திரவ்ய ஹோமம், சங்காபிஷேகம், 18ம் படி விஷேட பூஜை என்பன நடைபெறும். அதற்கமைய இன்று சபரிமலை குரு முதல்வர் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி மஹா ராஜ ராஜ குரு 06



35 ஆவது பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்ட சீ.டி. விக்கிரமரத்ன, நேற்று மாலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார். புதிய பொலிஸ் மாஅதிபர் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

தொழிலாளருக்கு 1,000 ரூபா சம்பள அதிகரிப்பு;

## பிரதமரின் உறுதிமொழி மீது எமக்கு நம்பிக்கை

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா அடிப்படை சம்பளம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்கப்படுமென சபையில் பிரதமர் உறுதி வழங்கியுள்ளதால் அதனை அவர் நிறைவேற்றுவாரென நம்புகிறோமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் காணி, பெருந்தோட்ட அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,



இலங்கை வந்துள்ள இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை, ...ராம இல்லத்தில் நேற்று சந்தித்தார். அவருடன் இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் ...லேயும் கலந்து கொண்டார்.




## மட்டு. பல்கலைக்... அரசுடமையாக்கப்படும்

### தனியார் நிறுவனமாக இயங்க அனுமதியில்லை

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தை தனியார் நிறுவனமாக இயங்க அனுமதியளிக்க மாட்டோம். அதனை அரசுக்கு சுவீகரித்து மாணவர்களின் வளத் தேவைக்காக பயன்படுத்துவோமென கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் காலை 10 மணிக்கு கூடியது. மனுக்கள் சமர்ப்பணத்தின் பின்னர் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், மட்டக்களப்பு பல்கலைக்கழகம் அரசுக்கு சுவீகரிக்கப்படுமா? என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தனவால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.



அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

மட்டக்களப்பு பல்கலைக்கழகம் வரையறுக்கப்பட்ட நிறுவமாக 2016.2.09 பதியப்பட்டுள்ளது. நிறுவனத்தின் 90 சதவீதமான பங்குகள் ஹிரா மன்றத்துக்கும் 10 சதவீதமான பங்குகள் அஹமட் சிராஸ் ஹிஸ்புல்லாவுக்கும் உரித்துடையதாகவுள்ளது. அந்நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில் 08 பேர் இருந்துள்ளனர். இந்நிறுவனத்தின் மூலம் 18 பாடவிதானங்கள் முன்னெடுக்கப்படவிருந்தன. பாடவிதானங்களில் ஷரீஆ சட்டம் தொடர்பிலான பாடமொன்றுமுள்ளது. அதற்கு வழங்கப்பட்டுள்ள பெயர்தான் Bachelor of art Islamic studies. 06

குருநகர், வாழைச்சேனை, பேசாலை;

## ...மைப்பு வசதிகளுடன் ...பிடித் துறைமுகங்கள்

### பாராளுமன்றத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

**ஷம்ஸ் பாஹிம், நிசாந்தன் சுப்பிரமணியம்**

பருத்தித்துறை, குருநகர், பேசாலை, வாழைச்சேனை உட்பட நாட்டின் அனைத்து பாகங்களிலும் சகல வசதிகளும் கொண்ட மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க இருப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கடற்றொழிலாளர்களுக்கு காப்புறுதி மற்றும் ஓய்வூதியத் திட்டங்களை அறிமுகப் படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடற்றொழில் அமைச்சு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

கொவிட் 19 காரணமாக கடற்றொழில்சார் செயற்பாடுகள் சந்தித்துள்ள பின்னடைவுகளில் இருந்து மீள்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



குறிப்பாக கந்தர, வெல்லமன்கர, பலப்பிட்டிய, ஹிக்கடுவ, அம்பலங்கொட, காலி, மிரிஸ்ஸ, நிலாவெளி, ஹம்பாந்தோட்டை, சுதுவெல்ல, தொடந்துவ, மயிலிட்டி, வாழைச்சேனை போன்ற இடங்களில் சகல உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மீன்பிடித் துறைமுகங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பருத்தித்துறை, குருநகர், பேசாலை மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு 06

கொரோனா வைரஸ்;

## தொற்றாளர்கள் 22,279 குணமடைந்தோர் 16,000

### உயிரிழந்தோர் எண்ணிக்கை 99

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 22 ஆயிரத்து 279ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவு நேற்று தெரிவித்தது.

அதேவேளை நேற்றுவரை கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்துள்ளதாகவும் நேற்றைய தினம் மாத்திரம் 410 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாகவும் அந்தப் பிரிவு தெரிவித்தது.

மேலும் 5,703 வைரஸ் தொற்று நோயாளிகள் நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளிலும் மருத்துவ



கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அந்த பிரிவு தெரிவித்தது.

அதே வேளை, நேற்று 06

பல்கலைக்கழக தரவரிசைப்படுத்தல்

## மூன்றாவது இடத்திற்கு முன்னேறிய யாழ்.பல்கலை



இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களின் தரப்படுத்தல் பட்டியலில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

www.topuniversities.com என்ற இணையத் தளத்தினால் உலகிலுள்ள பல்கலைக்கழகங்களை அவற்றின் தர நிர்ணய நியமங்களின் அடிப்படையில் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் தரப்படுத்தலிலேயே 06

மாவீரர் நினைவு தினம்;

## முகநூலில் பதிவிட்ட 04 பேர் ஏறாவூரில் கைது

**ஏறாவூர் நிருபர்**

மாவீரர் தினத்தை அனுஷ்டித்தல் தொடர்பான தகவல்களை முகநூலில் வெளியிட்ட நான்கு பேர் மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தீவிரவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர்களாக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிமன்ற அனுமதியின் கீழ் இவர்கள் ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவதாக பொலிஸார் மேலும் கூறினர். இவர்கள் சித்தாண்டி, வந்தாறுமூலை மற்றும் கொம்மாதுறை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களென்றும் தெரியவருகிறது. 06

'மண்ணுக்காக மரணித்தவர்களுக்கு சபையில் நினைவுகூருகிறேன்'

## மாவீரர்களுக்கு பாராளுமன்ற...

## தேயிலை ஏற்றுமதியை அதிகரிக்க என்ன வழி?

## ஜனாதிபதி பொதுமன்னிப்பில் 600 சிறை கைதிகள் விடுதலை

**லோரன்ஸ் செல்வநாயகம்**